புதுச்சேரி அரசு
மாவட்ட நீதிபதி அலுவலகம்
*******

எண்: 555/DM/D1/2011/Exp புதுச்சேரி, தேதி: 22.07.2011

## செய்திக் குறிப்பு

### பட்டாசு சில்லறை விற்பனைக் கடை - உரிமம் வழங்குதல்

எதிர் வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, புதுச்சேரியில் பட்டாசு சில்லறை விற்பனைக் கடை நடத்த உரிமம் பெற வேண்டுவோர், அதற்கான விண்ணப்பப் படிவங்களை, புதுச்சேரி சாரம் வருவாய்த் துறை வளாகத்தில் உள்ள 'மாவட்ட ஆட்சியர்' அலுவலகத்தில் 28.07.2011 முதல் 26.08.2011 வரை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தை www.pon.nic.in என்ற வலை தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 02.09.2011 ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள் மேற்சொன்ன அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும்.

2008ஆம் ஆண்டின் வெடிமருந்து சட்ட விதிகளுக்கு உட்பட்டும் மற்றும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக உள்ள கடைகளுக்கு மட்டுமே உரிமம் வழங்கப்படும்:

(i) பட்டாசு சில்லரை விற்பனை கடை தரைதளத்தில் குறைந்த பட்சம் 9 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டதாக இருக்க வேண்டும்.

(ii) இரண்டு பட்டாசு சில்லரை விற்பனை கடைகளுக்கிடையே அல்லது பட்டாசு/வெடி மருந்து வைத்திருக்கும் இடம் அல்லது கல்வி நிலையங்கள், மருத்துவமனை, வழிபாட்டுத் ஸ்தலங்கள், திரையரங்கம், சந்தை, போன்ற பாதுகாக்கப்பட்ட இடங்களிலிருந்து குறைந்தது 3 மீட்டர் இடைவெளி இருக்கவேண்டும்.

(iii) விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரரின் புகைப்படம், கடையின் வரைபடம், இடத்தின் உரிமை தொடர்பான பத்திர நகல் முதலியன இணைக்கவேண்டும்.

குறிப்பிட்டுள்ள கடைசி தேதிக்குபின், எக்காரணத்தை கொண்டும் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படவோ அல்லது பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படவோ மாட்டாது. மேலும் விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிப்பதால் மட்டும் பட்டாசு கடை உரிமம் வழங்கப்படும் என்ற உத்திரவாதம் இல்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

DEPARTMENT OF INFORMATION & PUBLICITY
PUDUCHERRY
GOVERNMENT OF PUDUCHERRY

(கோ. ராகேஷ் சந்திரா)
மாவட்ட ஆட்சியர் மற்றும்
மாவட்ட நீதிபதி